1990 மார்ச் 21]

மாவட்டந்தோறும் அரசு அச்சகம் அமைத்தல்

*5807—**திரு. எஸ். என். எம். உபயதுல்லா :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசு அலுவலகங்களில் அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் கிடைப்பதில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைந்திட மாவட்டந் தோறும் அரசு அச்சகம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலகங்களில் அச்சிட்ட படிவங்கள், பதிவேடுகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் எதுவும் இல்லை. எனவே மாவட்டந்தோறும் அரசு அச்சகம் அமைத்திடும் தேவை தற்பொழுது இல்லை.

திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொது மக்களுக்குத் தேவையான நல்வாழ்வுத் திட்டங்களுக்கான படிவங்கள் எல்லாம் தனியாரிடத்திலே கூடுதலான காசுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதைத் தவிர்த்திடும் வகையில், நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைப் போன்று அச்சு வேலைகளை ஏற்றுச் செய்வதாலே தொழிலாளர்களுக்கு அதிக வேலை கிடைப்பதற்கான வழி வகைகளைச் செய்யவும், பாடப் புத்தகங்கள் காலம் தாழ்ந்து கிடைப்பதைத் தவிர்த்திடும் வகையிலே இத்தகைய அரசு அச்சகங்களை மாவட்ட தலை நகரங்களிலே ஏற்படுத்திட அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுது பொருள் அச்சு துறையிலே இப்போது 8 அச்சகங்கள் உள்ளன. அதிலே 3 சென்னையிலே இருக்கின்றன. மற்றவை பல்வேறு மாவட்டங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் பாட நூல் நிறுவனத்திடமிருந்து இந்த வருடம் நமது அரசு அச்சகத் துறையிலேயே நாங்கள் அச்சிட்டுத் தருகிறோம் என்று அவர்களிடம் கேட்டிருக்கிறோம். அதையெல்லாம் அடிக்கக் கூடிய அளவுக்கு, அரசாங்கத்திற்குத் தேவையான படிவங்கள் அத்தனையும் அடிக்கக் கூடிய அளவுக்கு வசதி வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால் எதிலும் இடர்ப்பாடுகள் இல்லாமல் அத்தனை படிவங்களும் கிடைக்கச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்புதலோடு வினாக்கள்—விடைகள் நேரம் சற்று நீடிக்கப்படுகிறது.